1968 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு செ. மாதவன்: மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் மதராஸ் ஸ்டேட் எலெக்ட்ரிஸிட்டி கன்ஸல்டேட்டிவ் கவுன்ஸில் என்றிருக்கிறது. அது போதும் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் தொழிலாளர்கள் சார்பில் அவர்களுக்கும் அதில் பொறுப்பு கொடுக்கவேண்டுமென்று நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களிடம் அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிருர்கள்.

நாங்குநேரியில் முன்சீப் கோர்ட்

*** 187 விஞ.—திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லே.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இப்போது நாங்குநேரி தாலுகாவின் பெரும் பகுதியும் திருநெல்வேலி முன்ஸீப் கோர்ட் ஜூரிஸ்டிக்ஷனில் இருக்கிறது. ராதாபுரம் கிட்டத்தட்ட 40 மைல் தூரத்தில் இருக்கிறது. இதனல் கட்சிக்காரர்களுக்கு ஏராளமான செலவு ஏற்படுகிறது. திருநெல்வேலியில் முன்சீப் கோர்ட், அடிஷனல் முன்சீப் கோர்ட் என்று இரண்டு கோர்ட்டுகள் இருக்கின்றன. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு நாங்குநேரியில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் வைப்பது, தூரத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிட முடியாது. உயர்நீதி மன்றத்தினிடம் இதுபற்றி கேட்கப்பட்டது. அவர்கள் அங்கு தனியாக ஒரு நீதிமன்றம் வைத்தால் அதற்குரிய வேலேப்பளு இருக்காது என்று கருத்து தெரிவித்து, வேண்டாமென்று சொல்லியிருக்கிருர்கள்.

திரு. என். துரைபாண்டியன் : நாங்குநேரி தாலுகாவில் உள்ள ஒரு பகுதி மக்கள் திருநெல்வேலிக்கும், ஒரு பகுதி மக்கள் அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டுக்கும் போகவேண்டியிருக்கிறது. நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் வைக்கா விட்டாலும், அதிக தூரம் போக வேண்டியிருப்பதால், ராதாபுரம், வள்ளியூர் போன்ற இடங்களில் உள்ளவர்கள் திருநெல்வேலி முன்சீப் கோர்ட்டுக்குப் போக அனுமதிக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்டதொரு வேண்டுகோளே உறுப்பினர் அவர்கள் அனுப்பினல் அதை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி பரிசீலிக்கச்சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் அமைப்பதைப் பற்றிய துணை விஞவைக் கேட்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். முற்பகல் 10-00

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னண்டோ : தலேவரவர்களே, நாங்குநேரி வட்டத்திலுள்ள வள்ளியூரில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்துவது பற்றிய அரசாங்க பரிசீலனே நீண்ட நாளாக இருந்து கொண்டிருக்கிறதே, அது எந்த நிலேயில் உள்ளது, கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லே.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்பொழுது முன்சீப் போர்ட் அமைக்கவில்லை என்றாலும் நாங்குநேரியில் ஒரு ஆடிஷனல் ஃபர்ஸ்ட் கிளாஸ் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்-கம்-முன்சீப் கோர்ட் என்பது போலாவது அமைக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதையும் கூட உயர்நீதிமன்றம் பரிசீலித்தது. அதுவும் தேவையில்லை என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கேள்வியில் வேறு பகுதியைக் கேட்டு விடுவார்களோ என்ற நோக்கத்துடன் தலைவரவர்கள் நாங்குநேரியைப் பற்றித்தான் கேட்க வேண்டுமென்று முன்னதாகவே சொல்லிவிட்டார்கள். நாங்குநேரியைப் பற்றித்தான் கேட்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்கள் கேட்பதைப் போல் வேறு எங்கெங்கிருந்து, இங்கே வேண்டும், அங்கே வேண்டும் என்ற வேண்டுகோள்கள் வந்திருக்கின்றன ? வெள்ளைக் காரர்கள் காலத்தில் வைக்கப்பட்டது. நமது சட்ட அமைச்சர் அவர்கள் சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள், எதிர்க்கட்சியில் இருந்தபோது நன்றாக வாதாடிக் கொண்டிருந்தவர்கள், அவர்கள் மறுபரிசீலனை செய்து இப்படிப் பட்ட கஷ்டங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில் மையமாக மாற்றியமைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் நீதிமன்றம் பரவலாக அமைக்க வேண்டு மென்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், இருக்கின்ற நிலை மைகளை மாற்றி யமைத்தால் அதனால் பல சிக்கல்கள் வருவதை கனம் அங்கத்தினர்களே அனுபவத்தில் உணர்ந்திருப்பார்கள். இனிமேல் புதி தாக நீதிமன்றம் அமைக்கும் பொழுது மக்கள் வசதியைக் கருதிப் பரவ லாக வைக்க வேண்டு மென்று அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவரவர்களே, நாங்குநேரியில் முன்சீப் கோர்ட் ஆரம்பித்தால் வேலைப்பளு இருக்காது என்பதாக உயர்நீதிமன்றம் கூறியதா ? அது ஒரு பக்கம் இருந்தாலும், வேலைப்பளு அதிகமாக இருக்க வேண்டுமா, அல்லது மக்களுக்குச் சௌகரியங்கள் இருக்க வேண் டுமா என்பதை வைத்து மக்களுக்குச் சௌகரியமான ஒரு வட்டத்தில் முன்சீப் கோர்ட்டை அமைக்க வேண்டுமென்ற நிலையில், தமிழக அரசு உயர்நீதிமன்றத்திற்குச் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புது நீதிமன்றம் அமைக்கும் பொழுது இவ்வாறு இருக்க வேண்டு மென்று வேறு ஒரு அங்கத்தினர் கூறிய யோசனையை ஆலோசித்துப் பார்த்தோம். அதனால் ஏராளமான செலவு வருகிறது. வேலை யில்லாமல் அவ்வளவு தூரம் செலவாவது நல்லது அல்ல.

திரு. என். துரைபாண்டியன் : தலைவரவர்களே, நாங்குநேரி தாலுக் காவில் ராதாபுரம் பஞ்சாயத்து யூனியன், வள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் இந்த இரண்டு யூனியன்களையும் கன்னியாகுமரி ஜில்லாவோடு இணைத்து வள்ளியூரில் முன்சீப் கோர்ட் வைக்க இருப்பதாக ஒரு வதந்தி நிலவு கிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வதந்திகளுக்குப் பதில் சொல்வது முறை அல்ல.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்பொழுது திரு நெல்வேலியிலே எல்லா கோர்ட்டுகளும் ஒரே காம்பவுண்டில் இருக்கின் றன. ஆனால் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் மட்டும் வண்ணாரப்பேட்டை என்ற இடத்தில் இருக்கின்றன. கோவாப்பரேட்டிவ் டிப்பார்ட்மெண்ட் அலுவலகம் கோர்ட் காம்பவுண்டிற்குள் இருக்கிறது. எனவே, இந்த

கோவாப்பரேட்டிவ் டிப்பார்ட்மெண்டை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்களை அந்தக் கட்டிடத்தில் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அன்றைக்கு அந்த இடத்திலேயே சொன்னேன், கூட்டுறவைச் சேர்ந்தவர்களுடன் பேசி ஏற்பாடு செய்துஅவர்களுக்கு வேறு இடம் பார்த்துக்கொண்டு விட்டால் ஆட்சேபணை இருக்காது.

வெள்ளிக்குறியிடாத வினுக்கள்

தமிழக அரசு போக்குவரத்தின் கன்னியாகுமரி பிரிவு

வினு 1—

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை போக்குவரத்து இலாகாவின் கன்னியாகுமரி பிரிவில் டவுன் சர்வீஸ் நீங்கலாக கிராமங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் 31—3—1968 அன்று டிக்கட் விற்ற வகையில் மொத்த வரவு தொகை என்ன ?

(இ) கட்டணங்கள் உயர்த்திய பிறகு அதே வகையில் 7—4—1968 அன்று வரவு என்ன ?

விடை—(அ) & (இ) தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த கன்னியாகுமரி பிரிவில், நகரில் ஓடிய பேருந்துகள், நீள்தொலைப் பேருந்துகள் நீங்கலாக, ஏனைய வழித்தடங்கள் அனைத்திலும் ஓடிய பேருந்துகளின்மூலம் 31—3—1968 தேதியன்று 47,702 ரூபாயும் 7—4—1968 தேதியன்று 54,034 ரூபாயும் வசூலாகியது.

(*a*) & (*b*) The collections of the Kanyakumari Branch of the Madras State Transport Department on 31st March 1968 and on 7th April 1968 in respect of all the services excepting town services and long distance services, were Rs. 47,702 and Rs. 54,034 respectively.

வினு 2.—

கல்லூரிகளுக்கான மானியம்

திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

1957 முதல் 1967 வரையில் நமது இராஜ்யத்தில் எந்தெந்த கல்லூரிகளுக்கு கிராண்ட் பணம் ரத்து செய்யப்பட்டது ? அதற்கான காரணங்கள் யாவை ?

விடை: 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் எக்கல்லூரிக்கும் ஆசிரியர் மானியம் மறுக்கப்படவுமில்லை அல்லது நிறுத்தப்படவுமில்லை.

During the period from 1957 to 1967 there was no case of refusal or withdrawal of teaching grant to any college.